# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு 2020

**விளம்பர எண் : 1/2020** **நாள் : 17.09.2020**

**1.** தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், இரண்டாம் நிலை காவலர் (மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படை- ஆண், பெண் மற்றும் திருநங்கை), இரண்டாம் நிலைக் காவலர் (தமிழ்நாடு சிறப்புக் காவல்படை -ஆண்) இரண்டாம் நிலை சிறைக் காவலர் (ஆண் மற்றும் பெண்) மற்றும் தீயணைப்பாளர் (ஆண்) பதவிகளுக்கான பொதுத் தேர்வு 2020-க்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து இணைய வழி விண்ணப்பத்தினை (Online application) வரவேற்கிறது.

**2.** விண்ணப்பதாரர்கள் இக்குழும www.tnusrbonline.org இணையதளத்தின் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஏனைய இதர வழிகளான விண்ணப்பப் படிவம் மற்றும் தட்டச்சுப் படிவம் மூலமாக விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**3.** இத்தேர்விற்குரிய முழு விவரங்கள் அடங்கிய தகவல் சிற்றேட்டினை இக்குழும www.tnusrbonline.org இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தினை நிரப்பிடுவதற்கு முன்னர், இக்குழும இணையதளத்திலுள்ள **தகவல் சிற்றேடு** மற்றும் **விண்ணப்பம் எப்படி சமர்ப்பிக்க வேண்டும்** எனும் அறிவுரையினையும் பதிவிறக்கம் செய்து அவற்றிலுள்ள விவரங்களை முழுமையாகப் படித்த பின்னர் இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

**4. காலிப்பணியிடங்கள் :** 10,906.

துறைவாரியான காலிப்பணியிடங்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| துறை | பதவி | ஆண்கள்/ பொது | பெண்கள்/ திருநங்கைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| காவல்துறை | இரண்டாம் நிலை காவலர் (மாவட்ட/மாநகர ஆயுதப்படை) | 685 | 3099 (பெண்கள்/ திருநங்கைகள்) | 3784 |
| | இரண்டாம் நிலை காவலர் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை | 6545 | -- | 6545 |
| சிறைத்துறை | இரண்டாம் நிலை சிறைக் காவலர் | 112 | 7 (பெண்கள்) | 119 |
| தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | தீயணைப்பாளர் | 458 | -- | 458 |

இது தவிர 72 பின்னடைவு காலிப்பணியிடங்கள் [ஆயுதப்படை -62 (பெண்கள்) மற்றும் சிறைத்துறை-10 (பெண்கள்)].

**5. ஊதிய விகிதம் :** ரூ.18200 - 52900

6. **கல்வித் தகுதி:-**

| | |
|---|---|
| (i) | **10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.** |
| (ii) | பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாமல் அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதியினைப் பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர். |
| (iii) | விண்ணப்பதாரர் 10-ம் வகுப்பில் தமிழை ஒரு மொழிப் பாடமாக படித்திருக்க வேண்டும். இல்லையெனில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை தமிழ்த் தேர்வில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து இரண்டாண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும். |
| (iv) | விண்ணப்பதாரர்கள் கோரும் இணைக்கல்வித் தகுதிக்கானச் சான்றிதழை (equivalent certificate) விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்ய வேண்டும், அவ்விதம் பதிவேற்றம் செய்யத் தவறினால் உரிய கல்வித் தகுதியாக ஏற்றுக்கொள்ள இயலாது. |

**7. வயது:**

விண்ணப்பதாரர் 01.07.2020 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும் 24 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். [01.07.2002 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்தவராகவோ, 01.07.1996 அன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராகவோ இருத்தல் வேண்டும்]. சில பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **வகுப்புவாரி பிரிவு** | **உச்ச வயது வரம்பு** |
|---|---|---|
| i) | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | 26 வயது |
| ii) | ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் | 29 வயது |
| iii) | திருநங்கைகள் | 29 வயது |
| iv) | ஆதரவற்ற விதவைகள் | 35 வயது |
| v) | முன்னாள் இராணுவத்தினர் / முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படைவீரர்கள். | 45 வயது |

**8. வகுப்புவாரி இடஒதுக்கீடு** :

| | |
|---|---|
| பொதுப் போட்டி | 31% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | 20% |
| ஆதிதிராவிட வகுப்பினர் | 15% |
| ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் | 3% |
| பழங்குடியின வகுப்பினர் | 1% |

ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கான 3% இடங்கள் முன்னுரிமையில் நிரப்பப்பட்ட பின்னர் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் மிகுதியாக இருந்தால் அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான ஒதுக்கீட்டின் கீழும் தேர்வு செய்யப்படுவார்கள். ஆதிதிராவிடர் (அருந்ததியர்) இடஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில் அப்பதவியிடங்கள் ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினரில்லாத பிற ஆதிதிராவிடர் வகுப்பினரைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**9. சிறப்பு ஒதுக்கீடுகள்:**

| ஒதுக்கீடு | சதவீதம் | தகுதிகள் |
|---|---|---|
| முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ளோர் | 5% | முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் பணியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் விடுவிக்கப்பட்டு (பணியிலிருந்து 17.09.2017க்குப் பின்னர் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்) இருப்பவர்கள் மற்றும் விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் விடுவிக்கப்படவுள்ளவர்கள் தகுதியுள்ளவராவார்கள். |
| விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீடு | 10% | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அல்லது தமிழ்நாடு ஒலிம்பிக் ஆணையத்தால் அல்லது இந்திய தேசிய ஒலிம்பிக் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு கழகங்கள் மூலம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட 15 விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு விளையாட்டுப் படிவம்-I / படிவம்-II-ஐ பெற்றவர்கள் மற்றும் கல்லூரி முதல்வர், இயக்குநர் பல்கலைக் கழக/ கல்லூரி விளையாட்டு பொறுப்பு அதிகாரியிடமிருந்து விளையாட்டுப் படிவம்.III-ஐ பெற்றவர்கள் தகுதியுள்ளவராவார்கள்.<br>(விளையாட்டுகளின் விவரம் மற்றும் முழுமையான தகுதி விவரங்கள் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன) |
| ஆதரவற்ற விதவை | 3% | ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழை சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர் (RDO)/ சார் ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து பெற்றவர்கள் தகுதியுள்ளவராவார்கள். |

**குறிப்பு:** மேலே சொல்லப்பட்ட சிறப்பு ஒதுக்கீடுகளில் தேர்வு செய்திட விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்தக் காலிப்பணியிடங்கள், பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு அந்தந்த வகுப்பிற்குரிய விண்ணப்பதாரர்களைக் கொண்டு தேர்வு செய்யப்படுவார்கள். சிறப்பு ஒதுக்கீட்டினுள்ளும், தற்போது நடைமுறையிலுள்ள அரசு விதிகளின் அடிப்படையில் வகுப்புவாரி இடஒதுக்கீடு பின்பற்றப்படும்.

**10. தேர்வு முறைகள் :** இத்தேர்வானது கீழ்க்காணும் தேர்வு நிலைகளின்படி நடத்தப்படும்.

| வ.எண். | தேர்வு நிலைகள் | மதிப்பெண்கள் | விவரம் |
|---|---|---|---|
| 1. | எழுத்துத் தேர்வு | 80 மதிப்பெண்கள் | பகுதி-அ: பொது அறிவு 50 மதிப்பெண்கள் (கொள்குறி வினா வகை)<br>பகுதி-ஆ: உளவியல் 30 மதிப்பெண்கள் (கொள்குறி வினா வகை) |
| 2. | உடற்கூறு அளத்தல் | இல்லை | உடற்கூறு அளத்தல் தகுதித் தேர்வேயாகும்.<br>முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் துணை இராணுவப் படையினர் மற்றும் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ மற்றும் துணை இராணுவப் படையினருக்கு உடற்கூறு அளத்தல் தேர்வு இல்லை.<br>உடற்கூறு அளத்தல் முழுமையான விவரம் வரிசை எண்.12-ல் கொடுக்கப்பட்டுள்ளன. |
| 3. | உடல்தகுதித் தேர்வு | இல்லை | உடல்தகுதித் தேர்வு தகுதித் தேர்வேயாகும்.<br>உடல்தகுதி முழுமையான விவரம் வரிசை எண்.13-ல் முழுமையாக கொடுக்கப்பட்டுள்ளன. |
| 4. | உடற்திறன் போட்டிகள் | 15 மதிப்பெண்கள் | உடற்திறன் போட்டிகளின் விவரங்கள் கீழே வரிசை எண்.14-லும், தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. |
| 5. | சிறப்பு மதிப்பெண்கள் | 5 மதிப்பெண்கள் | தேசிய மாணவர் படை சான்றிதழ் - 2 மதிப்பெண்கள்,<br>நாட்டு நலப்பணித் திட்டம் சான்றிதழ் - 1 மதிப்பெண்,<br>விளையாட்டு சான்றிதழ் - 2 மதிப்பெண்கள்,<br>ஒவ்வொரு சான்றிதழுக்கும் மதிப்பெண் வழங்கும் விவரங்கள் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. |
| | மொத்தம் | 100 மதிப்பெண்கள் | |

**11. எழுத்துத் தேர்வு :**

i. எழுத்துத் தேர்வு 37 மாவட்ட தேர்வு மையங்களில் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்துகொள்வதற்கான மாவட்டத்தைத் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ள மாவட்ட விவரத்தை பார்வையிட்டு தேர்வு செய்துகொள்ளலாம்.

ii. எழுத்துத் தேர்வுக்கான நேரம் 1 மணி 20 நிமிடங்கள்.

iii. எழுத்துத் தேர்வில் தகுதி மதிப்பெண்ணாகக் குறைந்தபட்சம் 28 மதிப்பெண்கள் விண்ணப்பதாரர்கள் பெறவேண்டும். இருப்பினும், அடுத்த கட்டத் தேர்வான அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளுக்கு விண்ணப்பதாரர்கள் பெறும் உயர்ந்தபட்ச மதிப்பெண்கள் அடிப்படையில் மொத்தக் காலிப்பணியிட எண்ணிக்கைக்கேற்ப 5 மடங்கு விண்ணப்பதாரர்கள் மட்டுமே வகுப்புவாரியாக அழைக்கப்படுவார்கள்.

**12. உடற்கூறு அளத்தல்:** இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளபடி குறைந்தபட்சம் உயரம் மற்றும் மார்பளவு அளவுகள் உடற்கூறு அளத்தலின் போது பெற்றிருக்க வேண்டும்.

| வகுப்புவாரி பிரிவு | ஆண்கள் | பெண்கள் மற்றும் திருநங்கைகள் |
|---|---|---|
| பொதுப்போட்டி, பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட (இஸ்லாமியர்), மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | 170 செ.மீ | 159 செ.மீ |
| ஆதிதிராவிடர் /ஆதிதிராவிடர் (அருந்ததியர்) / பழங்குடியினர் | 167 செ.மீ | 157 செ.மீ |

| மார்பளவு (ஆண்களுக்கு மட்டும்) | |
|---|---|
| சாதாரண நிலையில் குறைந்தபட்சம் | 81 செ.மீ |
| மூச்சை உள் வாங்கிய நிலையில் விரிவாக்கம் (Expansion) | 5 செ.மீ.<br>(81 முதல் 86 செ.மீ வரை இருத்தல் வேண்டும்) |
| முன்னாள் இராணுவ மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் | உடற்கூறு அளத்தல் மற்றும் மார்பளவு அளத்தல் தேர்வு கிடையாது. |

**13. உடல் தகுதித் தேர்வு :**

| | | |
|---|---|---|
| i) | ஆண்கள் | 1500 மீட்டர் தூரத்தை 7 நிமிடங்களில் ஓடி முடிக்க வேண்டும். |
| ii) | பெண்கள் மற்றும் திருநங்கைகள் | 400 மீட்டர் தூரத்தை 2 நிமிடம் 30 வினாடிகளில் ஓடி முடிக்க வேண்டும். |
| iii) | முன்னாள் இராணுவ, முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் | 1500 மீட்டர் தூரத்தை 8 நிமிடங்களில் ஓடி முடிக்க வேண்டும். |

**14. உடற்திறன் போட்டிகள்:**

| | | |
|---|---|---|
| i) | ஆண்கள் | (i) கயிறு ஏறுதல் (ii) நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல் (iii) 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம். |
| ii) | பெண்கள் மற்றும் திருநங்கைகள் | (i) நீளம் தாண்டுதல் (ii) கிரிக்கெட் பந்து எறிதல் (அல்லது) குண்டு எறிதல் (4kg) (iii) 100 மீட்டர் (அல்லது) 200 மீட்டர் ஓட்டம் |
| iii) | முன்னாள் இராணுவ, முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் | (i) குண்டு எறிதல் (7.26kg) (ii) நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல் மற்றும் (iii) 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம் |

மேலும், முழுமையான உடற்திறன் போட்டிகளுக்குரிய தகுதி விவரங்கள் இக்குழும www.tnusrbonline.org இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ள தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

**15. அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல்**: அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகள் நடத்துவதற்கு முன்னரே நடத்தப்படும்.

**16. தற்காலிகத் தேர்வு :** எழுத்துத் தேர்வு, உடற்திறன் போட்டிகள் மற்றும் NCC, NSS, Sports/Games சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் ஆகியனவற்றில் பெறும் மொத்த உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் விண்ணப்பதாரர் தெரிவித்துள்ள பதவி விருப்ப முன்னுரிமைப்படியும், காலியிடங்களுக்கு ஏற்ப வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி மாவட்ட/மாநகர ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிக்கு தற்காலிகமாக விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

**17. மருத்துவப் பரிசோதனை மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த விசாரணை**: காவல், சிறை மற்றும் தீயணைப்பு மீட்புப் பணிகள் துறைக்கு தற்காலிகமாகத் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கும் மற்றும் முந்தைய பழக்க வழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த காவல் விசாரணைக்கும் உட்படுத்தப்படுவார்கள். மருத்துவத் தேர்விலும், காவல் விசாரணையிலும் தேர்வு பெறும் விண்ணப்பதாரர்கள் பணி நியமனத்திற்கு தகுதியுள்ளவராவார்கள்.

**18.தேர்வுக் கட்டணம்: ரூ.130/-.** (தேர்வுக் கட்டணம் செலுத்தும் விவரங்கள் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன).

19. தாங்கள் இணைய வழி விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் தவறானது/ போலியானது/ தவறான பொருள் கொண்டது/ சரியானதன்று என எந்நிலையில் தெரியவந்தாலும் அல்லது விண்ணப்பித்துள்ள இப்பதவிக்குரிய தகுதி அளவுகோலினை நிறைவு செய்ய இயலாதவராயினும் தங்களது விண்ணப்பதாரர்நிலை தேர்வில் கலந்து கொண்டிருப்பினும் இரத்து செய்யப்படும்.

## இத்தேர்வுக்கான முக்கிய நாட்கள்

| | | |
|---|---|---|
| **i** | **விளம்பர நாள்** | **17.09.2020** |
| **ii** | **இணைய வழி விண்ணப்பம் பதிவேற்றம் துவங்கும் நாள்** | **26.09.2020** |
| **iii** | **இணைய வழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்** | **26.10.2020** |
| **iv** | **எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள்** | **13.12.2020** |

**உறுப்பினர் செயலாளர்,**
**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,**
**சென்னை-08.**